# கல்வி அபிவிருத்திச் சங்கம்

අධ්‍යාපන සංවර්ධන සමිතිය

# Education Development Society
# Batticaloa.

EDS

Regd No : MN / DS / SS / 10
(Founded in 1992)

15/1, Kovil Road,
Kallady - Uppodai,
Batticaloa, Sri Lanka.
T. P : 065 - 2223181

EDS 1992 - 2002


21.03.2004

மதிப்பிற்குரிய ராஜ் விதுரன் அவர்கள்
லண்டன்

அன்புடையீர்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 12 வருடங்களுக்கு மேலாக கல்வி மற்றும் சமூகப் பணியில் ஈடுபட்டு வருகின்ற எமது அமைப்பானது கடந்த 2000 ஆண்டு முதல் மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களைச் சேர்ந்த கல்வியில் ஆர்வம் காட்டும் வறிய மாணவர்களுக்கு உதவும் வகையில் ஆண்டுதோறும் சராசரியாக 35 மாணவர்களை இங்கு அழைத்து வந்து தங்குமிடத்துடனான நவீன கல்வி வசதிகளை வழங்கி வருகின்றோம். தற்போது எமது பராமரிப்பில் 86 பெண்களும், 68 ஆண்களுமாக 154 மாணவர்கள் உள்ளனர். வார இறுதி நாட்களில் ஆங்கில மொழி மூலமான கல்வியும், கணனிக் கல்வி, இசை, நடனம், வாய்ப்பாட்டு, வயலின், விளையாட்டு என பல்வேறு துறைகளில் இம் மாணவர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகின்றது. இச் செயற்பாடுகளை விரிவுபடுத்தும் நோக்கில் சர்வதேச தரத்திலான ஆங்கிலமொழிமூல பாடசாலை ஒன்றுக்கான மூன்றுமாடிக் கட்டடமொன்றை அமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளோம். இவ்வாறான பணிகளில் ஈடுபடும் எமக்கு அண்மைக் காலமாக கிடைக்கப் பெற்றுவந்த உதவிகள் தடைப்பட்டதால் பெரும் நிதி நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளையில் உங்களின் வருகை எமக்கு பெரும் மகிழ்ச்சியையும் நம்பிக்கையும் தந்துள்ளது. எனது மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு உதவ முன்வந்ததோடு எமது அமைப்பின் செயற்பாடுகளை வெளிக்கொணரும் நோக்கில் எமது நீண்டகால தேவையான இணையப் பக்கமொன்றை வடிவமைத்து உருவாக்கியமைக்கு எமது அமைப்பின் சார்பாகவும் மாணவர்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி!

இங்ஙனம்,

(சி.விபுலானந்தராஜா)
செயலாளர் -EDS